விலை ஒரு அணா

REGD. M. 4642

# திராவிடநாடு

மலர் 6 | 14—3—48 | இதழ் 40

# மத்திய திராவிடர் கழக நிர்வாகக் கூட்டம்

—: (o) :—

7—3—48ல் சென்னை மவுண்ட் ரோடு மீரான் சாயபு தெரு, 1-ம் எண் உள்ள பெரியார் அவர்கள் இல்லத்தில் மத்திய திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அஹிம்சையையும், அன்பையும், சத்தியத்தையும் குறிக்கோளாய்க் கொண்டு இந்நாட்டு மக்களை மதம், சமுதாயம், சாதி ஆகியவைகளில் எவ்வித பேதமுமின்றி மனித சமுதாயத்தை ஒன்றுபடுத்துவதிலும் அந்நிய ஆட்சியிலிருந்து நாட்டைப் பூரண விடுதலை ஆக்குவதிலும் முக்கிய கவலைகொண்டு உழைத்து வந்த பெரியார் காந்தியார் அவர்களுக்கு துர்மரணம் ஏற்பட்டதற்காகக் கூட்டம் தன்னுடைய துக்கத்தையும் ஆழ்ந்த அநுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு தீர்மானத்தை அன்னார் குடும்பத்தினருக்குத் தெரிவிக்கப்பட்டது.

சர்க்கார் நம் கழகத்தின் சார்பாய், கருப்புச் சட்டைப் படை என்று ஒரு படை இருப்பதாகக் கருதி அதைச் சட்டவிரோதமான ஸ்தாபனம் என்பதாக, விளம்பரப்படுத்தி இருப்பதற்கு தலைவர் அவர்கள் வெளியிட்ட அறிக்கையை நிர்வாக சபை அங்கீகரித்து ஏகமனதாய் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்தத் தடையுத்தரவு காரணமாக நாட்டில் திராவிடர் கழகஸ்தாபனங்களைச் சோதனை இட்டதற்கும் ஒவ்வொரு இடங்களில் ஒவ்வொரு மாதிரியான தன்மையில் சோதனை முறையைச்சோதனையாளர்கள்கையாண்டதற்கும் தனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், சோதனையில் எடுத்துக்கொண்டு போன சாமானகளையும், ஆதாரங்களையும் உடனே திருப்பிக்கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப்பட்டது.

திருச்சி மாகாண மகாநாட்டின் தீர்மானத்தின்படியும் அதை அநுசரித்து அதற்குப் பிறகு சென்னையில் 16—12—45-ல் கூட்டப்பட்ட திராவிடர்கழக நிர்வாக சபைக்கூட்டத் தீர்மானங்களின்படியும் ஓராண்டு திட்டமாகக் குறிப்பிடப்பட்ட காரியங்கள் அதாவது, மேலும் கழகத்திற்கு அங்கத்தினர் சேர்த்தல்; 50,000 ரூபாய்கழகத்திற்கு நிதி சேர்த்தல்; சமுதாய சீர்திருத்தத்தைத் தீவிரமாய்ப்பிரசாரம் செய்தல்; கழகத்திற்கென்று ஒருகொடி ஏற்படுத்துதல்; நகைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணன், இசைஅரசு எம். கே. தியாகராஜபாகவதர் அவர்களை விடுதலை செய்ய முயற்சிப்பது; இயக்கத்தோழர்களையும் மற்றதிராவிடப் பொதுமக்களையும் தங்களுக்கு உள்ள சமுதாய இழிவைக் காட்டிக்கொள்ளும் அறிகுறியாகக் கருப்புடை தரிக்கும்படி செய்தல் ஆகிய காரியங்களும், அதற்கடுத்த 20-1-46 நிர்வாக சபைக்கூட்டத்தில் இயக்கத்திற்கு தினசரிப்பத்திரிகை நடத்த வேண்டுமென்றும் அதற்காகப் பெரியாருக்குச் சொந்தமான 'விடுதலை'ப் பத்திரிக்கையை இயக்கப் பத்திரிக்கையாக நடத்தவேண்டுமென்றுபெரியாரைக் கேட்டுக்கொண்டு அதற்கான எல்லாக்காரியங்களும் செய்யத் தலைவர் என்கிற முறையில் பெரியாரிடமே ஒப்படைத்ததற்கேற்ப இயக்கத்துக்கு ஒரு தினசரி நடத்தப்பட்டிருப்பது முதலான காரியங்கள் நடைபெற்றிருப்பதைக் கண்டு இக்கமிட்டி மகிழ்ச்சியடைவதோடு அதற்காக முக்கிய பங்கெடுத்துக் கொண்டு பாடுபட்ட தோழர்களுக்கும், இயக்க அன்பர்களுக்கும் மற்று திராவிடப் பொதுமக்களுக்கும் நிர்வாக சபைக்கூட்டம் நன்றியறிதல் தெரிவித்துக்கொண்டது.

இயக்கத்தலைவர் பெரியார் ஈ. வெ. [illegible] தலைமை தோழர் டி. பி. வேதாசலம், தோழர்கள் கே. கே. நீலமேகம். ஆ. திராவிடமணி, ப. சீதாபதி, ஜீ. பி. சோமசுந்தரம், ஆ. நரசிம்மன், எஸ். நீதிமாணிக்கம், பொன்னுசாமி, ஜீ. பராங்குசம், இராமாமிர்தத்தம்மாள், கே. ஏ. மணி, ஏ. சித்தையன், ஈ. திருநாவுக்கரசு, சி வி. எம். அண்ணாலை கே ஜெகதீசன், டி. ரங்கராசு, எஸ். ஆர். சுப்ரமணியம், கே. கோவிந்தசாமி, கோவிந்தராசு, சி. டி. டி. அரசு, என் வி. நடராசன், கே. ந சிவாயம், சி. தங்கராசு டாக்டர், தர்மாம்பாள், சி. முனுசாமி, ரோசு அருணாசலம், சி. என். அண்ணாத்துரை, ஈ. வி. கே. சம்பத், பி. ஷண்முகவேலாயுதம் ஆகியோர் வந்திருந்தனர்.

மற்றும், தலைவர் அறிக்கையில் தெரிவித்துள்ளபடி சர்க்கார் தடையுத்தரவால் கழக அங்கத்தினர்கள் பொதுமக்கள் தங்களுடைய வேலைகளையும் மற்றும், அங்கத்தினர்சேர்த்தல், கழகங்கள் ஸ்தாபித்தல் சமுதாய இழிவை ஞாபகத்தில் வைத்திருப்பதற்கு அறிகுறியாகக் கருப்புடை அணிதல், அதைப்பரப்புதல், சமுதாய - இழிவு நீக்கப் பிரசாரம் செய்தல் ஆகிய காரியங்களில் சிறிதும் மாறுதல் இல்லாமல் முன்னி

லும் அதிகமான ஊக்கத்தோடு, முன்னிலும் அதிகமான சாந்தமும் சமாதானமுமான தன்மையில், தொண்டாற்றிக்கழக லக்ஷியத்திற்கு வெற்றி கிடைக்கச் செய்ய வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறது.

இயக்கக்கொள்கைகள் திட்டங்கள் ஆகியவற்றிற்கான காரியங்களுக்கு வேண்டிய நிதி செலவுசெய்யவும் உள்ள உரிமையோடு கழக விதியை அனுசரித்து அடியிற்கண்ட 17-தோழர்கள் காரியக்கமிட்டி அங்கத்தினர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

1. பெரியார் ஈ. வே. ரா. 2. தி. பொ. வேதாசலம், 3. கே. கே. நீலமேகம், 4. இ. திருநாவுக்கரசு, 5. கே. ஜகதீசன், 6. ஆ. திராவிடமணி 7. நீதிமாணிக்கம், 8. எஸ். எஸ். பழனிச்சாமி, 9. ந. கோவிந்தராசலு 10. நரசிம்மன், 11. எஸ். ஆர். சுப்ரமணியம், 12. சி. வி. எம். அண்ணாமலை, 13, எம். ஆர். மத்ரன். மற்ற 4 பேர் தலைவர் வேண்டும்போது நியமிக்க வேண்டியது என்பதாக ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

அடுத்த மாகாண மாநாடு திருநெல்வேலி ஜில்லாவில் தூத்துக்குடியில் நடத்த தலைவர் கொடுத்த அநுமதியை இக்கூட்டம் அங்கீகரிக்கிறது என்பதாக ஏகமனதாய்த் தீர்மானிக்கப்பட்டது.

## சென்னையில் திராவிடர்கழகமாநாடு

7—3—48-ல் சென்னைப் பெரியமெட்டுத் திராவிடர்கழகமுதலாவது மாநாடு தோழர் V. K. சுப்பராயலு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தோழர் T. P. வேதாசலம் அவர்கள், இந்நாட்டிற்கு மதக்கலப்பற்ற ஆட்சியே தேவை என்பதை வற்புறுத்திப்பேசி மாநாட்டைத் திறந்துவைத்தார். தோழர் ஆரியசங்கரன் அவர்கள் அனைவரையும் வரவேற்று, மாநாடு கூட்டப்பட்டதன் நோக்கத்தை விளக்கிக் கூறினார். தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், இந்த நெருக்கடியான சமயத்தில், தலைவர் அவர்களின் அறிக்கையின்படி திராவிடர்கள் அனைவரும் சாந்தத்தையும் சமாதானத்தையும் கடைப்பிடித்து நடக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதன் பின்னர் தோழர் அண்ணாத்துரை, கருஞ்சட்டை அணிவது, திராவிட மக்களுக்கு ஏற்பட்டுள்ள இழிவை அறிவிக்கும் ஒரு துக்க அறிகுறியேயன்றி, அது ஒரு ஸ்தாபனமல்லவென்றும், ஒரு சமுதாயம் தனக்கேற்பட்ட இழிவைக்கூட வெளிப்படையாகத் தெரிவிப்பதைக் குற்றமென்று சர்க்கார் கருதி அதற்காக நடவடிக்கை எடுக்கத் துணிந்ததென்றால், உண்மையான நெருக்கடி நமக்கல்ல, சர்க்காருக்கே என்றும், இத்தகைய தவறானவழிகளில் சர்க்கார் நடக்கத் தலைப்பட்டால், திராவிடர்கள் தங்களுடைய குறைகளைத் தீர்த்துக்கொள்வதில் முன்னிலும் அதிகமான முயற்சியையே எடுத்துக் கொள்வார்கள் என்றும் குறிப்பிட்டுப் பேசினார்.

அதன்பின்னர், பெரியார் அவர்கள் தமுடைய நீண்ட சொற்பொழிவில், கருப்புச்சட்டை அணிவது பற்றிய விளக்கத்தையும், அதனைச் சர்க்கார் சட்டவிரோதமாக்குவதற்குத் தூண்டுகோலாக இருந்தவர்களின் விஷமப்பிரசாரத்தை எடுத்துக் காட்டியும், திராவிடர் கழகம் எப்போதுமே பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டதில்லை என்பதையும், காந்தியாரின் அஹிம்சைக் கொள்கைக்கு மாறாகக் காங்கிரசே பல தடவைகளில் பலாத்காரமுறைகளைக் கையாண்டிருக்கிறதென்பதை ஆதாரங்களோடு எடுத்துக் காட்டியும், பலாத்காரமுறைகளைக் கையாளாத திராவிடர்கள், தங்கள் குறைகளையும் இழிவுகளையும் நீக்கிக்கொள்வதில் எப்பொழுமே சாந்தத்தையும் சமாதானத்தையுமே அடிப்படையாகக் கொண்டு பணியாற்றி வெற்றி பெறுவார்கள் என்றும் பேசி முடித்தார்.

அதன் பின்னர் காந்தியாரின் மறைவு குறித்து ஓர் அனுதாபத் தீர்மானமும், வேறுபல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்ட பின்னர், நன்றி கூறலுடன் மாநாடு இனிது முடிவுற்றது.

### பொதுக்கூட்டம்

மாலை 6-மணிக்குத் திருவல்லிக்கேணி கடற்கரையில் தோழர் C. D. T. அரசு அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும், தலைவர்பெரியார் அவர்களும் தோழர் அண்ணாத்துரையும், இன்றைய சர்க்கார், கருப்புச்சட்டையினர் மீது விதித்துள்ள தடையுத்தரவைக் கண்டித்தும், இத்தகைய தடையுத்தரவுகளினால் ஒரு சமுதாயத்தையும் அதன் முற்போக்கையும் அடக்கிவிடலாம் என்று சர்க்கார் கருதுமானால், அதற்கு எதிர்மாறான பலனையே காண முடியுமென்றும் சர்க்காருக்கு எச்சரிக்கை விடுக்கும் முறையில பேசினர். கூட்டத்திற்கு ஆயிரக்கணக்கில் மக்கள் வந்திருந்து தங்கள் ஆதரவைக் காட்டினர்.

## டாக்டர் அம்பேத்கார் மாணவர் இல்லம்

திருச்சி, டாக்டர் அம்பேத்கார் மாணவர் இல்லத்தின் மூன்றாவது ஆண்டு விழா 29—2—48 காலை 10-மணிக்கு ரத்னவேலு தேவர் மண்டபத்தில், திரு. J. S. கண்ணப்பர் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடந்தது.

விழா ஆரம்பத்தில் யாவரும் எழுந்து இரண்டு நிமிஷநேரம் மௌனமாக நின்று மறைந்த மகாத்மா காந்திக்கு வணக்கம் செலுத்தினர்.

தஞ்சை தோழர் S. சுயம்பிரகாசம் அவர்கள் தம் சொற்பொழிவில், சென்னை சர்க்கார் ஆதித்திராவிட மக்களுக்காக ஒதுக்கின ஒருகோடி ரூபாயையும் தகுந்த முறையில் செலவு செய்ய இதுவரை திட்டம் தயாரிக்காதது தவறுஎன்றும், இது பற்றிய எவ்வித தகவலும் தெரியவில்லைஎன்றும்வருத்தத்தோடு குறிப்பிட்டார்கள்.

பேராசிரியர் திரு. A. இருதயசாமி அவர்கள் சுதந்திரம் என்பது பற்றியும் "மாணவர் மாண்பு" என்னும் பொருள் பற்றி தோழர் M. கைலை ஆனந்தர் அவர்களும் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

## புதுக்கோட்டை ஐக்யம்

இந்திய யூனியனில் கலவாமல் தனித்திருந்த புதுக்கோட்டை சமஸ்தானம், இப்போது யூனியனுடன் ஐக்யமாகிவிட்டது இதையொட்டிப், புதுக்கோட்டை மன்னர் விடுத்த அறிக்கையில்,

"மக்களின் எண்ணத்திற்கு மாறாக இந்திய யூனியனில் நான் சேர எண்ணவில்லை என்ற போதிலும், சர்தார் படேலின் கோரிக்கைக்காக இணங்கினேன்"

என்று கூறியுள்ளார்.

புதிய தொடர் கதை

கற்பனைச் சித்திரம்



[7—3—48 தொடர்ச்சி]

முதல் நாள் வரவேற்றதைவிட, மரகதம், டாக்டரைச் சற்று அதிகமான முகமலர்ச்சியுடன் வரவேற்றாள். மரகதத்தின் அலங்கார விதிகளே சற்று அலாதியானது. அழகாக விளங்கவேண்டும், அலங்காரம் செய்துகொள்ள வேண்டும் என்பதிலே தனக்கு அக்கறை கிடையாதென்றும், அந்தத் தளுக்குத்தனம் தனக்குத் தேவையில்லை என்றும் பிறர் கருதும் விதத்தில் அலங்காரம் செய்துகொள்வதே மரகதத்தின் வாடிக்கை. நெற்றியிலே குங்குமப் பொட்டு இருக்கும். ஒரு பக்கமாகச் சிறிதளவு சிதைந்துபோயிருக்கும்! பொட்டுச் சரியாக இருக்கிறதா என்று மரகதம் கவலை கொள்ளவில்லை என்பதல்லப் பொருள். கண்ணாடி முன் நின்று, வேண்டுமென்றே பொட்டை ஒரு புறம் கலைத்து விட்டால், அது ஒரு தனி ரகமாக இருக்கும் என்பது மரகதத்தின் எண்ணம். சற்றுத் தளர்ந்த ஜடை போட்டுக்கொண்டு, நெகிழும் ஆடை உடுத்திக்கொண்டு, பவுடரைக் கொஞ்சமாகப் பூசிக்கொண்டு, மரகதம் விளங்கினாள். முன்னாள் பார்வைக்கும் இன்றைய பார்வைக்கும் டாக்டர் சுந்தரேசனும் தெரிந்து கொள்ளக்கூடிய வித்தியாசம் இருந்தது. முதல் நாள், ஒரு பெரிய மனிதனை, மதிப்போடு வரவேற்று மனமகிழ உபசரிக்கும் விதமாக நடந்துகொண்டாள் மரகதம். ஆனால் விமலாவுடன் பேசிய பிறகு, மரகதம் மனதிலே சூதான எண்ணங்கொள்ளவே, சோபிதமாக விளங்கப் பிரயத்தனப் பட்டாள். பார்வையைப் பாணமாக்கினாள்! சிரிப்பை, சந்தமாக்கினாள்! அவள், டாக்டரை முதல் நாள் வரவேற்றாள், மறுதினம், அவர் மீது படை எடுத்தாள். டாக்டர் உள்ளே நுழைந்ததும், குலுக்கி நின்றாள், கலுக்கெனச் சிரித்தாள். இதற்குள் மேலாடைக்கும் மரகதத்துக்கும் இடைவிடாத போர் நடந்துவிட்டது. வாயிலிருந்து வார்த்தைகள், வளைந்தும் குழைந்தும் வந்தன. நேரே, தன் படுக்கை அறைக்கு அழைத்துச் சென்றாள்.

கட்டிலின் மீது டாக்டர் உட்கார்ந்தபிறகு, "இதோ நான் போய் விமலாவை அழைத்துக் கொண்டு வரட்டுமா! உடனே போகட்டுமா, சற்று, பொறுத்துக்கொள்ள முடியுமா" என்று குறும்பாகக் கேட்டாள். பதில்கூற இயலாது, பல்லைக் காட்டினான் சுந்தரேசன். அங்கிருந்தபடியே மரகதம், விமலாவைக் கூப்பிட்டாள். விமலாவும் வந்தாள். மரகதத்தின் மினுக்கைக் கண்டாள். விஷயம் விளங்கிவிட்டது. விசாரம் கொண்டவளாய்க் கீழே உட்கார்ந்தாள். வாய் திறக்கவில்லை. டாக்டர், தானாகவே சம்பாஷணை துவக்கினார். அவருடைய கேள்விகளுக்கு, தலை அசைத்தும், உதட்டைப் பிரித்தும், ஒன்றிரு பதங்கள் கூறியும் விமலா பதில் அளித்தாள். மரகதம், விமலாவின் போக்கைக் கண்டு, ஏது சிறுக்கி விஷயத்தை ஜாடையாகத் தெரிந்து கொண்டாள் போலிருக்கிறதே என்று எண்ணினாள். தெரிந்து கொள்ளட்டுமே, நமக்கென்ன என்று எண்ணிக் கொண்டு, தன் காரியத்தைக் கவனிக்கத் தொடங்கினாள்.

"டாக்டரே இன்று நீங்கள் எப்போது வருவீர்கள், எப்போது வருவீர்கள் என நான் எதிர்பார்த்தபடி இருந்தேன்" என்றாள் மரகதம்.

"என்னையா?" என்று சுந்தரேசன் ஆச்சரியத்துடன் கேட்டார்.

"ஆமாம்! உங்களைத்தான்! ஏன், எதிர்பார்க்கக் கூடாதோ? ஆனால் நான் நம்மவிமலாவைப்போல வேறே எண்ணத்திலே உம்மை எதிர்பார்த்துக்கொண்டிருக்கவில்லை. இங்கே நாம் பேசிக்கொண்டிருப்பது தெரிந்தால் கூட, எங்கள் செட்டியார் இரண்டு நாளைக்குச் சாப்பிடமாட்டார்" என்று மரகதம் கூறிவிட்டுச் சிரித்தாள்.

டாக்டர்: "விமலாமட்டும் என்ன? விமலாவுக்கும் வேறு எண்ணம் கிடையாது. ஏன் இன்று ஒரு மாதிரியாக இருக்கிறாய் விமலா"! என்று விமலாவைக் கேட்டான்.

மரகதம், அதற்கு "விசாரந்தான்! இருக்காதா, கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்ற கவலைதான்" என்று பதில் கூறிக்கொண்டே, விமலாவின் தவடையைப் பிடித்துக் கிள்ளினாள். விமலா அதற்கும் நகைக்கவில்லை.

"ஆமாம் விசாரந்தான்! டாக்டர் என் வலையிலே விழவில்லையே என்ற கவலைதான்! விழுந்தால் தீர்த்துக் கட்டிவிடலாம் என்ற ஆசைதான்! ஏன், ஆசைகொண்டால் தப்பா? அவரும் சாமியார் அல்ல, நானும் பத்தினி அல்ல!" என்றாள் விமலா.

"அப்பாடா! இப்போதுதான் அந்தப்பழைய விமலாவைக் கண்டேன். ஆனால் விமலா, உனக்கு உள்ளபடி அந்த மாதிரி ஏதாவது எண்ணமுண்டா சொல்லிவிடம்மா" என்று பயந்தவன் போல் பாசாங்கு செய்து கொண்டு சுந்தரேசன் கேட்டான்.

"ஏன் இருக்கக்கூடாது, நரைத்த நாரிகளுக்கு இருக்கும்போது எனக்கு ஏன் இருக்கக்கூடாது. பழுத்த பழம் பசப்பிக் கொண்டிருக்கும்போது, எனக்கு மட்டும் என்ன?" என்றாள்.

"விமலா என்னடி அம்மா! ஏதோ வேடிக்கையாகப் பேசுகிறாள் என்று பார்த்தேன். நீ பேசுவதைக் கேட்டால், சாக்கிட்டுப் பேசுவது போல் தோன்றுகிறது" என்று கடுகடுத்துக் கேட்டாள் மரகதம்.

விமலா ஒரு கேலிச்சிரிப்பு சிரித்துவிட்டு, "உனக்கேனம்மா கோபம் வருகிறது. நீ என்ன செய்தால் எனக்கென்ன! டாக்டரை, உன் கட்டிலின் மீது உட்கார வைத்துக்கொண்டால் எனக்கென்ன? கை பிடித்து இழுத்தால்தான் எனக்

(6-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி] 14—3—48 [ஞாயிறு

# டி-வேலரா! நினைவிருக்கட்டும்

எந்த ஒரு கட்சியாயினும், அது அதிகாரத்திற்கு வந்துவிட்டால், அதற்கு மதிப்பும் ஓரளவு செல்வாக்கும் இருப்பது சகஜம். அதிலும், அதிகாரத்திற்கு வருமுன், பொது மக்களுக்கு அளவுகடந்த ஆசைகளைக் கூறி, அவர்களுடைய ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்ற ஒரு கட்சி அதிகாரத்துக்கு வந்துவிடுமானால், அந்தக் கட்சிக்கு மேலும் சிறிது செல்வாக்கு அதிகமாகும்.

இந்தச் செல்வாக்கு, நிரந்தரமானது—அழிக்க முடியாதது என்று கருதிக்கொண்டு, அதிகாரத்தில் அமர்ந்துள்ள ஒரு கட்சி, அதிகார போதையில் தன்னுடைய பழைய வாக்குறுதிகளை எல்லாம் மறந்து, காரியமாற்றத் தொடங்குமாயின், அதிகாரபீடம் ஆட்டங்கொடுத்து விழுந்து விடும்.

பொது மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் தன் பக்கம் இருந்தாலன்றித், தன்னுடைய அதிகார பீடம் நிலைத்திருக்காது என்பதை மறந்து, கண்மூடித் தர்பார் நடாத்தும் எந்தக் கட்சியும் நீடித்திருந்து அதிகாரம் செலுத்தமுடியாது. அப்படிப்பட்ட கட்சிக்கு அவ்வப்போது ஆட்டம் ஏற்படுவதும், அதிகார பீடம் மாறுவதும், பின்னர் அந்தக் கட்சி அதிகாரத்துக்கே வரமுடியாத நிலை ஏற்படுவதும் நாட்டின் பல பகுதிகளிலும் நடக்கும் சம்பவங்களாகும்.

இந்த நிலைமையையே இன்று ஆட்சிப் பீடத்திலுள்ள சென்னை சர்க்காரும் ஏற்படுத்திக் கொள்ளும் முறையில் தன்னுடைய அதிகாரத்தைப் பிரயோகித்து வருகின்றது. எந்தப்பக்கம் திரும்பினாலும், மக்களுடைய கொதிப்பையும், குமுறலையும், கொந்தளிப்பையுமே சர்க்கார் காணும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. எந்த ஆட்சியாளர் காலத்திலும் ஏற்படாத வேலை நிறுத்தங்கள் இன்றைய ஆட்சியில் ஏற்பட்டு விட்டன.

ஆலைத் தொழிலாளர்கள்
ஆரம்ப ஆசிரியர்கள்
என். ஜி. ஓ. க்கள்
போலீஸ் சிப்பந்திகள்

இன்னும் எத்தனையோ பேர், தங்கள் தங்கள் குறைகள் தீர்க்கப்பட வேண்டுமென்பதற்காகக் கிளர்ச்சிகளும் வேலை நிறுத்தங்களும் செய்தனர்—செய்கின்றனர். இவையெல்லாம் சர்க்காரின் இன்றைய ஆட்சி முறை எப்படி இருக்கின்றதென்பதையே எடுத்துக்காட்டுவதாக உள்ளன.

பொதுமக்களின் கிளர்ச்சிகள் ஒரு புறம் இருக்க, அதிகார பீடத்திலுள்ள மந்திரிசபைக்குள்ளேயே ஒத்துழையாமை இயக்கம் தோன்றிவிட்டது. மந்திரிசபை ஆரம்பத்திலிருந்தே இந்த இயக்கம் வளர்ந்து வருகிறது. மந்திரிசபை ஏற்பட்ட சில நாட்களுக்குள்ளாகவே, அதில் மாறுதல் உண்டாகும் அளவுக்கு ஆட்சி முறையில் அலங்கோலம் ஏற்பட்டு விட்டது.

பிரகாசம் மந்திரிசபை கலைக்கப்பட்டு, ஓமந்தூரார் மந்திரிசபை ஏற்படுத்தப்பட்டது.

ஏன் இந்த நிலை ஏற்பட்டது? பிரகாசம் மந்திரிசபை வேறு கட்சி; ஓமந்தூரார் மந்திரிசபை வேறு கட்சியா? இல்லை. இரண்டும் ஒரு கட்சிதான். என்றாலும், அதிகார பீடத்தில் அமர்ந்து ஆட்சி செலுத்தக்கூடிய அறிவைப்பெற்றுள்ள ஒரு கட்சியையே சார்ந்துள்ள மந்திரிகளுக்குள்ளேயே ஒத்துழையாமை இயக்கம் புகுந்துவிட்டதென்றால், அவர்களுடைய ஆளும் திறனும், அதனால் மக்களுக்கு ஏற்படும் நன்மைகளும் எந்த அளவு உருவான பலனைத்தருமென்று, அவர்களை ஆட்சிப் பீடத்தில் அமர்த்திய பொது மக்கள் எண்ணிப்பார்க்கும் காலம் வந்துவிட்டது.

மந்திரி சபையில் ஏற்பட்டுள்ள மாறுதல் இந்த அளவோடு நின்றுவிடுமென்றும் சொல்வதற்கில்லையே! ஓமந்தூரார் மந்திரிசபையையும் கவிழ்த்துவிட்டு, வேறு புதிய மந்திரிசபையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற அளவுக்கு நிலைமை வளர்ந்துவிட்டதே! மக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்று ஆட்சிப் பீடம் ஏறிய ஒரு கட்சிக்குள் திடீர் திடீர் "பச்சோந்தி" மாற்றம் ஏற்படக் காரணம் என்ன? இந்தமாற்றம், மக்களின் செல்வாக்கு மந்திரி சபைக்கு இருக்கிறதென்பதைக் காட்டுகின்றதா? அல்லது மக்களுக்கு மந்திரி சபையிடம் மதிப்பில்லை என்பதைக் காட்டுகின்றதா? மக்களிடமிருந்து பெற்ற செல்வாக்கை மந்திரிசபை இழந்துவிட்டதென்பதைத்தானே இந்நிகழ்ச்சிகள் நன்கு எடுத்து காட்டுவனவாக உள்ளன. மந்திரிசபையின் ஆட்சிமுறை, மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகவோ, பூர்த்தி செய்யாவிட்டாலும், மக்களுக்கு மனமாறுதலை உண்டாக்காததாகவோ இன்றைய மந்திரிசபை வேலை செய்யவில்லை என்பதையே இம்மாறுதல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

எந்தக் கட்சியினுடைய எதிர்ப்பும் இன்றி, ஏகபோகமாகத், தேர்தலில் வெற்றிபெற்று, அதிகாரத்தில் அமர்ந்துள்ள எம்மை எவர் என்ன செய்துவிடமுடியும் என்ற எக்களிப்போடு, அதிகாரபோதையையும் அளவுக்கு மிஞ்சிக் கொண்டுவிட்டால், எந்த அசைக்கமுடியாத கட்சிக்கும் அழிவு ஏற்படும் என்பது திண்ணம். இதனை அதிகாரத்தில் இருக்கும் எந்தக் கட்சியும் மறந்துவிடக் கூடாது. அது, எவ்வளவு பலம் பொருந்திய கட்சியாய் இருந்தாலும் சரி, மக்களுடைய ஆதரவை அமோகமாகப் பெற்றுள்ள கட்சியாய் இருந்தாலும் சரி, மக்களின் ஒத்துழைப்பை இழக்கும் முறையில் தன்னுடைய ஆட்சிமுறையை நடாத்திச் செல்லுமானால், அந்தக் கட்சிக்கு அதிகார பீடத்தில் இடம் கிடைக்காது. இதற்கு ஒரு உதாரணம்.

இங்கிலாந்தின் பிடியிலிருந்து விடுபட்ட அயர்லாந்தை டி-வேலரா என்பவர் தன்னுடைய அதிகாரத்துக்குக்கீழ்கொண்டுவந்து, கடந்த பதினாறு ஆண்டுகளாக ஏகபோகமாய் ஆண்டுவந்தார். இன்று டி-வேலராவின் நிலை என்ன? பதினாறு ஆண்டுகளாக மக்களின் செல்வாக்கையும் ஒத்துழைப்பையும் பெற்று ஆட்சி புரிந்துவந்த டி-வேலரா இன்று ஆட்சியில் இல்லை. மக்கள் அவருக்கு எதிராகக் கிளம்பி அவரை விரட்டி விட்டனர்.

அயர்லாந்து, நம் நாட்டைப்போல், பலதிறப்பட்ட அரசியல் கட்சிகளையோ, சாதி மதவேறுபாடுகளையோ கொண்ட ஒரு நாடல்ல, என்றபோதிலும் அந்நாட்டின் தலைவன், பொதுமக்களின் செல்வாக்கையும்

ஒத்துழைப்பையும் பெற்று ஆட்சி செலுத்த முடியவில்லையென்பதை, பலதிறப்பட்ட அரசியல் கட்சிகளையும் சாதிமதங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள ஒரு நாட்டைத் தாங்களே ஆளலாம்—ஆளமுடியும் என்று எண்ணிக்கொள்ளும் இன்றைய நம் ஆட்சியாளர்கள் தங்கள் நினைவுக்குக் கொண்டுவந்து பார்ப்பார்களானால், அவர்களுடைய ஏகபோக ஆட்சி முறையால், இந்நாட்டு மக்களின் நிரந்தரமான ஒத்துழைப்பை எந்தக் காலத்திலும் பெற முடியாதென்பதை உணர்வார்கள்.

எனவேதான், காரணம் எதுவுமின்றிக், கிடைத்த செல்வாக்கை வைத்துக்கொண்டு, அடக்குமுறையை அள்ளி வீசுவது போன்ற முறை தவறிய காரியங்களைச் செய்யத் தலைப்பட்டிருக்கும் சென்னை சர்க்காருக்கு, தி-வேலரா, நினைவிருக்கட்டும் என்று எச்சரிக்கிறோம்.

—0—

# கதிர்காமம்—ஒரு விளக்கம்

[ஈழத்தடிகள்]

கதிர்காமத்தைப் பற்றிப் பேசும்பொழுது இங்குள்ளவர்கள் எல்லாருமே கண்டி என்ற சொல்லையும் அதனுடன் சேர்த்துக்கொள்கிறார்கள். அதாவது கண்டிகதிர்காமம் என்று கூறுகிறார்கள். பொதுவாகக் கண்டிகதிர்காமம் என்பது, ஒரு ஊருக்கு வழங்கப்படும் ஒரு பெயர் தான் என்று பொருள் கொள்ளும் முறையில் பேசுகிறார்கள். இதிலிருந்து இவர்கள் கூறும் கதிர்காமப் புதுமைகள் எந்த அளவுக்கு உண்மை என்பது புலப்படுகின்றது. ஒரு இடத்தின் பெயரையே சரியாகத் தெரிந்தும்—புரிந்தும் கொள்ள முடியாத நிலையில் உள்ளவர்கள் தாம், தாங்கள் கதிர்காமம் போய் வந்ததாகவும், அங்கு ஏதேதோ கற்பனைக்கும் எட்டாத புதுமைகள் நடப்பதைத் தாங்கள் நேரில் பார்த்ததாகவும் கூறுகிறார்கள். கதிர்காமத்திற்குப் போய் வந்ததாகக் கூறிக் கொள்பவர்களே இத்தகைய அண்டப்புளுகுகளை அஞ்சாது அளந்து கொட்டுகிறார்கள் என்றால், அங்கு செல்லாதவர்கள் கதிர்காமத்தைப் பற்றிப்பிறர் சொல்லக் கேட்டவைகளை உண்மை என்று தானே கொள்வர்.

கண்டி எங்கே இருக்கிறது? கதிர்காமம் எங்கே இருக்கிறது? கண்டிக்கும் கதிர்காமத்துக்கும் உள்ள தொலைவு எவ்வளவு? கண்டிக்கும் கதிர்காமத்துக்கும் யாதாயினும் தொடர்பு உண்டா? என்பனவற்றைக்கூட அறிய முடியாத அப்பாவிகள் தாம், கதிர்காமக் கோவிலுக்குள்ளே இருந்து ஒரு வண்டி தானாகவே வந்து தேங்காய்—பழங்களை ஏற்றிக்கொண்டு போய்த், தேங்காயை உடைத்துப் பழங்களைக் கிள்ளிச், சூடங்களைக் கொளுத்தி மீண்டும் அவ்வண்டி வெளியே வந்து அந்தப் பொருள்களை (பிரசாதங்களை) இறக்குமதி செய்துவிட்டு மறுபடியும் உள்ளே போய்விடுவதாகக் கூறுபவர்கள். கண்டிக்கும் கதிர்காமத்துக்கும் எவ்வளவு தொலைவு உண்டோ, அதைவிடப் பன்மடங்கு தொலைவு, இவர்கள் கூறும் கதிர்காமப் புதுமைக்கும் உண்மைக்கும் இடையே உண்டு என்பதை அன்பர்கள் அறியவேண்டும்.

கதிர்காமம் என்ற இடம் இலங்கைத் தென்கோடியில் உள்ளது. கண்டி என்ற ஊர் இலங்கையின் நடுப்பகுதியில் உள்ளது. இரண்டுக்கும் இடையே உள்ள தொலைவு ஏறக்குறைய இருநூறு கல் (மைல்) இருக்கும். ஒன்றுக்கொன்று இவ்வளவு தொலைவிலுள்ள இரு இடங்களின் பெயர்களை ஒன்றாக இணைத்துத்தான் "கண்டி கதிர்காமம் என்னும் ஊருக்குப் போய் வந்தோம் என்று கூறுகிறார்கள் என்றால், இவர்களால் இட்டுக்கட்டிக் கூறப்படும் கதிர்காமப் புதுமைகளின் இணைப்பு முறை எப்படியிருக்கும் என்பதை இனியாவது எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன்.

இரண்டு வெவ்வேறு ஊர்களை ஒன்றாக இணைத்து, ஒரு ஊராக்கிக் காட்டி, முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சுப் போடும் அளவுக்குத் 'திறமை' பெற்றவர்கள், கதிர்காமத்தைப் பற்றிய புதுமைகளை இட்டுக்கட்டி கூறுவதில் வியப்பொன்றுமில்லை. கண்டி, கதிர்காமம் என்ற இடங்களாவது இலங்கையில் இருக்கின்றன. ஆனால் இவர்களால் கூறப்படும் கதிர்காமப் புதுமைகள் எதுவும் அங்கு அணுவளவும் நடப்பதில்லை. என்றாலும் இப்புதுமைகள் எல்லாம் அங்கு நடப்பதாகவே இங்குள்ள பலரும் இன்றும் நம்புகிறார்கள்—நம்பும்படி அங்கு சென்று வந்த அறிவை அடகு வைத்த "அறிஞர்கள்" செய்துவிடுகின்றார்கள்.

ஒருவன், "நான் பாம்பே கல்கத்தா என்ற ஊருக்குப் போய்வந்தேன்; அங்கே ஒருவன் பூமியைப் பாயாகச் சுருட்டி, அதனை மணல் கொண்டு திரிக்கப்பட்ட கயிற்றால் கட்டினதைப் பார்த்தேன்" என்று இங்குவந்து கூறுவானானால், அவனைப் பார்த்து, "அப்பனே, பூமியைப் பாயாகச் சுருட்டியதும், அதனை மணற் கயிற்றால் கட்டியதுமான புளுகுக் கட்டைப் பிறகு அவிழ்க்கலாம்; முதலில் நீ பாம்பே கல்கத்தா என்ற ஊருக்கா போய் வந்தாய் தம்பி!" என்று கேட்டு எள்ளி நகைப்பரா அல்லது அவன் கூறுவது உண்மைதான் என்று நம்பி ஒப்புக்கொள்வரா? பாம்பே கல்கத்தா என்பது ஒரு ஊரா அல்லது இரண்டு வெவ்வேறு தனித்தனி ஊர்களா என்பதைக்கூடத் தெரிந்து கொள்ளமாட்டார்களா என்ற எண்ணமும் இன்றி, அதற்கு மேலும் அவன் பூமியைப் பாயாகச் சுருட்டிய கதையையும்தான் பாம்பே கல்கத்தா என்ற ஊருக்குப் போய்வந்ததை மெய்ப்பிக்க மேற்கோள் ஆதாரமாகக் காட்ட முயல்வதையும் இங்குள்ளோர் எப்படி நம்பமாட்டார்களோ, அதுபோலவேதான், கண்டி கதிர்காமம் என்ற ஊருக்கு அல்ல! அல்ல! ஊருக்குப் போய்வந்ததை மெய்ப்பிக்க, அங்கு வண்டி தானாக வருவதும் போவதும், ஓடி யாற்றுவதும், மற்றியவன் உடனே இறந்து விடுவதுமான மூடப் பழக்கங்களையும், வான் வெளித் தடாகத் தாமரைகளையும் மேற்கோள் ஆதாரமாகக் காட்ட முயல்கின்றனர்.

ஒரு புதுமை. கதிர்காமத்தைப் பற்றியது—இங்குள்ளவர்களால் அறியப்படாதது—இலங்கையில் உள்ளவர்களால் நீண்டகாலமாக அறியப்பட்டும், நம்பப்பட்டும் வந்தது. அஃது என்னையோ எனின், கூறுதும், கேண்மின் அதாவது, கதிர்காமத்துக் கடவுளுடைய உடன்

(8-ம் பக்கம் பார்க்க)

## என் வாழ்வு

3-ம் பக்கத் தொடர்ச்சி

கென்ன? அவர் என்னிடம் பத்து வருடம் வந்தாரா? ஐந்து வருடம் வந்தாரா! எனக்கேன் விசாரம் வரப்போகிறது." என்று படபடத்துக் கேட்டாள். சுந்தரேசனுக்கு திகைப்பு உண்டாகிவிட்டது. இருவரும் ஒருவர் மீது ஒருவர் தன் பொருட்டுப் பாய்வார்கள் போல இருந்தது. காட்சியே அவனுக்குப் புதிது. "அடக்கிப்பேசு, நாக்கை அடக்கு. ரௌடியுடன் வாழுகிற வள்தானே. வாய் இருக்கும் ஆனால் என்னிடம் காட்டாதே" என்று மரகதம் எச்சரித்தாள். விமலா எழுந்துவிட்டாள்.

"ஆமாண்டி, எனக்கு வாய் துடுக்கு! உனக்கு! நீ பத்தினி! தாலி கட்டியவனைத் தவிக்கவிட்டு வந்தவள் தானே, புத்திவேறு எப்படி இருக்கும்" என்று கூறினான்.

"போதும் நிறுத்து. காலைக்காலையிலே வீட்டைக் காலிசெய்துவிட்டு மறுவேலைபார்" என்று மரகதம் நிபந்தனை போட்டாள்.

"ஆஹா! தடையில்லாமல்! நான் காலிசெய்துவிடுகிறேன், நீ டாக்டரை காலி செய்துவிடு" என்று கோபமாகக் கூறிக்கொண்டே, விமலா, சரேலென வெளியே போய் விட்டாள். விமலாவின் கண்களினின்றும் நீர் பெருகியதை டாக்டர் சுந்தரேசன் கண்டான்!

• • •

"தொந்தரவு சகிக்க முடியவில்லை. எத்தனை நேரம் இந்த வேதனைப் படுவது. அழுத்துப் படுக்கத்தான் நேரமுண்டா? அலைச்சல், அலைச்சல்!"

"என்னடி ரொம்ப "டால்" காட்டுகிறாய். இப்போ உன்னை என்ன தொந்தரவு செய்து விட்டேன், என் முகத்தை மூணுகோணலாக்கிக் கொண்டு முணு முணுக்கிறே என்று கேட்டேன். என்னமோ தொந்தரவு செய்யாதே. தூரப்படு, என்று அளக்கிறாயே. என்ன கதை?"

"எரிகிற நெருப்பிலே எண்ணெயை ஊற்றவேண்டாம், உங்களுக்குக் கோடி நமஸ்காரம், சற்று வாயை மூடிக்கொண்டு படுங்கள்."

"அடடா. என்ன விரக்தி! என்ன வந்து விட்டது உனக்கு? போன மாதம் போரிட்டுப் போரிட்டு, புது ரோல்தர் வளையலுக்கு வழி செய்து கொண்டாய், இப்ப எதுக்கு இந்த விசார நாடகம். மரகதம் என் மனதை நீ ரொம்ப வேதனை செய்துவிடுகிறாய். இது நல்லதல்ல; ஆமாம் நான் மனம் விட்டு சொல்கிறேன்."

"நான் எப்படியோ போகிறேன். நீங்கள் சுகமாக இருங்கோ. இனி செப்பாலடிச்சகாசு தரவேண்டாம்."

"நிஜமாத்தானு!"

"ஆமாம் உங்கள் சம்பந்தம் கூடத்தான் வேண்டாம். போதும் உம் மாலே நான் கண்ட சுகம். நாலு பேர் போற்றின குடும்பத்திலே பிறந்து, நல்லவனுக்கு வாழ்க்கைப்பட்டேன், கேட்பார் பேச்சைக் கேட்டுக் கெட்டேன். இப்போது நாய்படாத பாடு படுகிறேன்."

"ரொம்பப் பாடுதான் படுகிறேடி, ரொம்ப பாடு. குத்தி, புடைச்சி, எடுக்கிறாய் அல்லவா?"

"நான் என் குத்தி புடைக்கணும்? ஆண்டவன் எங்களுக்கு கால் வயிற்றுக் கஞ்சிக்கு வழி வைத்திருக்கிறான்."

"ரோஷம் வந்துவிட்டதா, சரி! மரகதம், என்னதான் உனக்கு விசாரம்? சொல்லேன்! உள்ளபடி சொல்கிறேன். நீ ஒரு மாதிரியாக இருந்தால் எனக்கு வேதனையாக இருக்கிறது. என்ன கோபம்?"

"கோபமுமில்லை, தாபமுமில்லை."

"நீ பேசற தினுசே காட்டுதே கோபத்தை. வெள்ளிக் கூஜா கேட்டாயே, அதற்குத்தானே விசாரம். சொல்லு."

"ஆமாம் என்றுதான் வைத்துக் கொள்ளுங்களேன். ஏன்? இருக்காதா கோபம், மூணு மாசமாத் தானே சொல்லிண்டே வந்திங்க. வந்துதா கூஜா."

"அப்பா! வந்தகா விஷயம் வெளியிலே. சரி, அடுத்த வாரத்திலே, நிச்சயம் கூஜா வாங்கிக்கொடுத்துவிடுகிறேன். இதோ பார்! மரகதம்! பார்த்தாயா இப்போ சிரிப்புப் பொங்குது. அடடே! இதுக்குள்ளே சிரிப்பை அடக்கி விட்டாயே. சிங்காரி, ஒய்யாரி, என் சிந்தையை மயக்க வந்த, சிங்காரி, ஒய்யாரி,"

"அடடா! பாட்டு ஆரம்பமா?"

"மரகதம் இப்போ......."

"காலை முதற்கொண்டு வயிற்று வலி. தயவு செய்து தூங்குங்கள்."

"சரி இதனை முதலிலேயே சொல்லிவிடுவதுதானே. வயிற்று வலியும் தலைவலியும் கால்வலியும் கண்வலியும் வந்தபடிதான் இருக்கிறது. டாக்டர்கள் ஊரிலே தெருவுக்குப் பத்துப்பேர் இருக்கிறார்கள். கர்மம். இதெல்லாம் பூர்வ கர்மம். என்ன மரகதம், சோடா சாப்பிட்டாயோ."

"சோடா சாப்பிட்டேன், சூரணம் சாப்பிட்டேன். போனுத் தானே என்னைப்பிடிச்ச பீடை."

"கிடக்குது தூங்கு. ஆமாம்! அப்படியே ஒரு புறமாகத்திரும்பிப் படுத்துக்கொண்டு தூங்கிவிடு. நாளைக்கு யாராவது லேடி டாக்டரிடம் காட்டி, நல்ல மருந்து சாப்பிடு. இந்த வயிற்று வலியை வளரவிடக் கூடாது. ரொம்பக் கஷ்டம்."

"ரொம்ப கஷ்டமா? ரொம்ப நஷ்டமா?"

"சிச்சீ நான் என்னடி காவாலிப் பயலா? எனக்குத் தெரியாதா சுகதுக்கம்."

"சரி! பேச்சை நிறுத்திவிட்டு, இப்படித் தவடையைக் கிள்ளுவது தர்மமா. இல்லை நான் கேட்கிறேன் இதை என்ன தவடை என்று எண்ணிக் கொண்டீர்களா இல்லை ரப்பர் பந்து என்று எண்ணமா. காவம் கலிகாலமல்லவா!"

"கிண்டல் காரியாச்சே நீ. கண்ணுச்சே!"

"ஆமாம், கண்ணே, மூக்கே, எல்லாம், இப்ப கொஞ்சிடவேண்டியதுதான், கூஜா கேட்டா யோசனை வந்துவிடும்."

"அடுத்தவாரம் நிச்சயம் வாங்கித் தருகிறேன். உடம்பை அலட்டிக் கொள்ள வேண்டாம் தூங்கு."

இந்த படுக்கயறைப் பசப்பு, மரகதத்தின் வீட்டில், நடந்தது. மரகதத்தின் விசாரத்துக்குக் காரணம், வெள்ளிக் கூஜா வாங்கிக் கொடாதது தான் என்று அவள் மையலில் சொக்கிய செட்டி எண்ணிக் கொண்டான். கூஜா வாங்கிக் கொடுப்பதாகச் சத்தியமும் செய்தான்.

மரகதமும் தன் விசாரத்துக்குக் காரணம் அதுதான் என்று பசப்பினாள். வெள்ளிக்கூஜாவுக்கும் வழி தேடிக்கொண்டாள். ஆனால்விசாரத்துக்குக்காரணம்,விமலாவுடன்மாலைநடந்த

சண்டைதான். விமலாவை வீட்டை விட்டுக்காலி செய்து விடும்படி கூறி விட்டாள். டாக்டரும் கோபமாக வெளியே போய்விட்டார். போட்ட பிளான் நிறைவேறாததே வருத்தம். விமலா, டாக்டர் எதிரிலே தன்னைப் பற்றி இழிவாகப்பேசியதால்கோபம். அந்த விசாரமே வயிற்றுவலிரூபமாகவும் காட்சி அளித்தது. அதற்குக் காணிக்கைதான் வெள்ளிக் கூஜா!

* * *

"என் எண்ணத்திலே மண் விழுந்துவிட்டது. இவன் இப்படி ஆவான் என்று நான் நினைக்கவே யில்லை. அவன் என்ன படிக்காதவனா? விஷயம் தெரியாதவனா? நமது குடும்பப் பெருமையும், குலப் பெருமையும், அவனுக்குத் தெரியாதா? பெயரைக் கெடுத்துக் கொண்டால், பைசாவுக்கு யாரும் தன்னை நம்ப மாட்டார்கள் என்பதுதான் தெரியாதா? எல்லாம் தெரிந்துதான் இப்படி ஆனான். எல்லாம் சொல்லுமாம் பல்லி, காடிப்பானையில் விழுமாம் துள்ளி என்பதுபோல் ஆச்சு. என்பேச்சைத்தட்டாதவன், இப்போது அந்தச்சிறுக்கி போட்ட சொக்குப் பொடியிலே மயங்கி விட்டானே! அவள் யாரோ வந்து சேர்ந்தாளே என் குடியைக்கெடுக்க. அவளை ஏன் திட்டவேண்டும். தாசி தானே அவள். அவள் தன்பிழைப்புக்காக அப்படித்தான் நடப்பாள். இவனுக்கு, எங்கே போயிற்று புத்தி என்று கேட்கிறேன். டாக்டராக இருந்தால் எதெதுவோ, கெட்டதும் அலைஞ்சதுமாக வரத்தான் வரும். எதுவோ, நாமுண்டு நமவேலையுண்டு என்று இருந்தால தானே பிழைக்க முடியும். வருகிறவன் முந்தாணியைப் பிடித்துக்கொண்டு போய்விட்டால் என்ன நடக்கும்? கண்டவளை கூடி எவ்வளவுபேர் எத்தனைரோகத்தை அனுபவிக்கிறார்கள். இவனே அப்படிப்பட்டவர்களுக்கு மருந்துகொடுக்கிறான். இவனே கடைசியில் இப்படி அலைகிறான். யார சொல்லமுடியும். அவன் என்ன சின்னக் குழந்தையா, அடித்துமிரட்ட, ஆண்டவன் தான் புத்தி புகட்டணும்" என்று, டாக்டர் சுந்தரேசனின் தாயார் கம்பவுண்டர் கண்ணுசாமியிடம் கூறி, விசனப்பட்டார்கள். கண்ணுசாமி டாக்டருக்கும் விமலாவுக்கும் சினேகிதம் ஏற்பட்ட சேதியைக்கூறிவிட்டு, தனது வேலையை விட்டு விலகிவிட்டதாகக் கூறினர். தாயாருக்கு விபாகூலம். சுந்தரேசனுக்கு நல்ல இடமாகப்பார்த்துப் பெண்பேசி முடிக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டு ஜாதகங்களை வரவழைத்துப்பார்த்துக் கொண்டிருந்த நேரத்திலே, இந்த சேதி, இடிபோல் வீழ்ந்தது. மகனைத்தூற்றவோ மனம்வரவில்லை. ஏனெனில், அவன் சுபாவத்திலேயே கூத்திக்கள்ளனல்ல. அவன் மீதுஇவ்விதமான கெட்டபெயர் வந்ததே இடையாது. கண்ணுசாமி கூறுவதற்கு முன்பு சுந்தரேசன் இபபடி நடப்பான் என்று எண்ண துளியும் இடம் ஏற்பட்டதேயில்லை. இதனாலேயே சுந்தரேசனின் அன்னைக்கு விசாரம் அதிகமாகி விட்டது. கண்ணுசாமியிடம், தன்மனக்குறையைக்கொட்டி சற்று ஆறுதல்அடைந்தாள். கண்ணுசாமியும், இடையிடையே தனது கருத்தையும் உலகானுபவத்தையும் எடுத்துக்கூறிக் கூறி, சம்பாஷணையை வளர்த்துக்கொண்டே போனான். ஒருவிஷயம் மட்டும் கண்ணுசாமி சொல்லவில்லை. எப்படிச் சொல்லமுடியும். மரகதத்தின் சேதியைத்தான் அவன் மறைத்தான். அது இயற்கைதானே. தன் கூடப்பிறந்தவளின் விபசாரத்தைஎப்படிச் சொல்லமுடியும்? சுந்தரேசனைப் பற்றிப்பேசிகொண்டிருந்தநேரமெல்லாம், கண்ணுசாமிக்கு மரகதத்தின் விஷயமாகவே மனவேதனை மேலும் மேலும் வளர்ந்தது.

* * *

வெறிக்கக் குடித்துவிட்டு உறக்கத்திலே, குறட்டை விட்டுக்கொண்டும், இடையிலே உளறிக்கொண்டும், ரௌடிரங்கன் படுத்திருக்க, அந்தக் கோரசத்தம் காதைக்குடையவும் மனதிலே சுந்தரேசனைப்பற்றி நடந்த சம்பவத்திலே ஏற்பட்ட வேதனை மனதைத்துளைக்கவும், கண்ணிலிருந்து பெருகிய நீர் தலையணையில் புரண்டு உதட்டை நனைக்கவும், தலையணையில் தர்பார் நடத்திக்கொண்டு வந்த "மூட்டைப்பூச்சிகள்" கழுத்தைப்பிடுங்கவும், படுத்துக்கொண்டிருந்த விமலா "தொலி ஜென்ம, முன்சேயு அடுகு" என்ற கீர்த்தனையைப்பற்றி எண்ணி மனதுக்குள் பாடிக்கொண்டிருந்த சமயம், கிரிதிக்கு, காலைக்கடித்துத் தொல்லைக் கொடுத்த கொசுவைத் தட்டுவதன் மூலம் "தாள"மிட்டுக் கொண்டிருந்தாள். வீதியில் உலவிய நாய் ஒன்று கச்சேரியில் அமர்ந்து கானத்தின் கருத்து அறியாதுகண்டகண்ட நேரத்தில் சபாஷ் சபாஷ் என்று கூறும் போலிரசிகன்போல் வள்-வள் என்று குலைத்துக்கொண்டிருந்தது.

* * *

"கொலை! கொலை! ஐயோ! யாரும் இல்லையா! போலீஸ்!" என்ற கூச்சல் கேட்டுச்சிந்தனையுடன்கட்டிலிலிருந்து எழுந்த விமலா, ... உலவிக்கொண்டிருந்த சுந்தரேசன் கூச்சல் கிளம்பிய பக்கமாக ஓடினான்.

(தொடரும்)

## அணுசக்தியால் கப்பல் ஓட்டலாம்

பம்பாய் டாட்டா கம்பெனியின் ஆராய்ச்சிக் கழகத்தின் பேராசிரியர்களில் ஒருவரான எச். ஜே. பாபா, மெக்ஸிகோவில் நடைபெறப் போகும் யுனெஸ்கோ மகாநாட்டில் கலந்து கொள்ளுவதற்காக லண்டனிலிருந்து பாரிஸுக்குப் புறப்பட்டுள்ளார்.

தன்னைப் பேட்டிகண்ட ராய்ட்டர் நிருபரிடம்பேராசிரியர் பாபா, அணுசக்தி சம்பந்தமாய்ப் பின்க்கண்ட விதம் கூறியிருக்கிறார்.

இன்னும் சில வருடங்களுக்குள் பிரமாண்டமான கப்பல்கள் அல்லது யுத்தக் கப்பல்கள் அணுசக்தியிலும் ஓட்டப்படலாம்.

கப்பலில் அணுசக்திக்காக ஒதுக்கப்படும் இடம் தற்சமயமுள்ள யந்திர அறையின் அளவுக்கு இருந்தால் போதுமானது. ஆனால் செலவு அதிகமாகும்.

ஒரு முறை ஒரு கப்பலில் அணுசக்தியைப் பிரயோகித்துவிட்டால் அந்தச்சக்தி ஒரு நூற்றாண்டுக்குப் போதுமானதாயிருக்கும்.

இனிமேல் அணுசக்தி ஒரு நாட்டிற்குமட்டும் உரியசொத்தாயிராது. காலம் செல்லச் செல்ல அணுசக்தியின் உபயோகம் உலகமுழுவதிலும் பரவிவிடும்.

அணுசக்தியைக் கைத்தொழில் உற்பத்திக்காக உபயோகிக்கும் நாடுகளில் நிச்சயமாக இந்தியாவும் ஒர் நாடாகவிருக்கும்.

இந்தியாவைப்போல் ஆயிரக்கணக்கான மைல்கள் தூரத்திலிருந்து நிலக்கரி சப்ளைபெறும் நாடுகளுக்கு அணுசக்தி அளவு கடந்த பிரயோஜனமாயிருக்கும்.

## கதிர்காமம்-ஒருவிளக்கம்

5-ம் பக்கத் தொடர்ச்சி

பாடு—அனுமதியின்றி எவரும் கதிர்காமத்துக்குப் போகக் கூடாதென்பது. யாராவது தன்னை வந்து வணங்கவேண்டுமென்று கதிர்காமக் கடவுள் விரும்பினால், உடனே அவரே அத்தகையவர்கள் கனவில் தோன்றி, "அன்பனே! நீ, நான் இருக்கும் இடமாகிய கதிர்காமத்துக்கு வந்து என்னை வணங்கக்கடவாய்" என்று கட்டளை பிறப்பிப்பாராம். அத்தகைய கட்டளை பெற்றவர்களே கதிர்காமத்துக்குப் போகலாம்; மற்றவர்கள் போகக்கூடாது-மீறிப்போனால், கண் மறையும், கருத்தழியும், கடுநோய் வரும், காலன் வருவான்—கன உயிரை கவர்ந்து செல்வான் என்பன போன்ற அச்சுறுத்தல்கள், இலங்கையில் நீண்டகாலமாக இருந்துவந்தன. நான் சிறுவனாக இருந்தபோதுகூட இந்த அச்சுறுத்தல் நடைமுறையில் இருந்ததை நான் அறிவேன். ஆனால் பெரியதனாகிக் கதிர்காமம் போன காலத்தில் இந்த அச்சுறுத்தல், அனுமதி பெற்றுக்கொண்டு அகன்றுவிட்டது. இப்போது, யார் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும், எந்த நோக்கத்தோடு வேண்டுமாயினும் அங்கு போகலாம்—வரலாம், தடை, தண்டனை, அச்சுறுத்தல் எதனையும் இன்றையகதிர்காமக் கடவுள் கையாள்வதில்லை. காலத்திற்கேற்பக் கடவுளும் தன்—கருத்தை மாற்றியும் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியும் விட்டது போலும்!

வேறொரு புதுமையும் கதிர்காமத்தைப் பற்றி உண்டு. அஃதியாதெனவும் புகல்கின்றேன், செவிமடுமின். அதாவது, கதிர்காமத்துக்குப் போகின்றவர்கள் யாராய் இருந்தாலும், அவர்கள், தாங்கள் புறப்படும் இடத்திலிருந்து கதிர்காமம் போய்ச் சேரும் வரையில், நடந்து செல்லவேண்டுமேயன்றி, எந்தவிதமான ஊர்திகளிலும் ஏறிச் செல்லக் கூடாதென்பது. இந்தக் கட்டுப்பாடும் நான் சிறுவனாக இருந்தகாலத்தில் நடைமுறையில் இருந்ததுதான். ஆனால் இப்போதில்லை. இப்போது வான ஊர்தி (ஏரோப்பிளேன்) முதல் எந்தவிதமான ஊர்திகளிலும் எவரும் போகலாம் என்ற அளவுக்குக் கதிரைநாதன் கருணைபுரிந்துள்ளார்.

மற்றும் ஒரு புதுமையும் இருந்தது. இயம்பக் கேண்மின். அதாவது; மாதவிடாய் ஆகக்கூடிய மாதர் எவரும் கதிர்காமத்துக்குப் போகக் கூடாதென்பது. மாதவிடாய் ஆகும் வயதைத் தாண்டிய மூதாட்டிகளே அங்கு போகலாம் என்பதுதான் இதன் விளக்கம். இப்போது அந்த அடக்கு முறையையும் கதிர்காமத்தையன் தளர்த்திக்கொண்டார். இப்போது, பருவமடைந்து மணமாகாமல் இருக்கும் மங்கையர் முதல் மணமான மங்கையர் ஈறாகப் பெண்ணுலகம் அனைத்துமே அங்கு செல்லலாம் என்ற நிலை பிறந்துள்ளது.

பிறிதொரு புதுமையும் கதிர்காமத்தைப்பற்றி இருந்தது. அதனையும் அறைகின்றேன், அன்பர்களே! அதாவது, அங்குதிருடக்கூடாதென்பது. இந்தத் திருட்டுக்குப் பரிகாரமாக இரண்டுவிதமான முறைகளைக் கதிரைவேலன் கையாண்டு வந்தார் என்று சொல்லப்படுகின்றது.

1. யாருடைய பொருளையாவது, யாராவது ஒருவன் திருடிவிட்டால், உடனே கதிரையம்பதிக் கடவுள், திருட்டுக் கொடுத்தவர் கனவில் தோன்றி, "அன்பனே! உன்னுடைய பொருளைத் திருடியவன், இன்ன இடத்தில் இருக்கின்றான்; நீ அங்கு போய் உன்னுடைய உடைமையை அவனிடமிருந்து பெற்றுக்கொள்" என்று அடையாளம் கூறி அனுப்புவாராம்; திருட்டுக் கொடுத்தவர் உடனே விழித்தெழுந்து, விண்ணை நோக்கி வணங்கி, ஐயனின் கருணை இருந்தவாறு என்னே! என்னே!! என்று வியந்து, அண்ணல் கூறிய அடையாளப்படி அந்த இடஞ் சென்று, திருடிய திருவுருவத்தைக் கண்டுபிடித்துத் தம்முடைய உடைமையைப் பெற்றுக் கொள்வாராம்.

2. திருடியவனுடைய கண்கள் பார்வையற்று, அவன் குருடனாய் விடுவான் என்பது. அதாவது, திருடியவன், தான் திருடிய பொருளோடு எங்காவது போவதற்குப் புறப்படுவானாயின், உடனே கதிர்காமக் கடவுள் அவனுடைய கண்களைக் குருடாக்கி, அவன் வழியறிந்து போகமுடியாதபடி செய்துவிடுவாராம்! இப்போது இந்த இரண்டு முறைகளையும் செய்வதில்லை என்ற முடிவுக்குக் கதிரைக் கடவுள் வந்துவிட்டார். ஆனால், கதிர்காமத்தில் திருட்டும் தாராளமாக நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது. திருடுவதையே தம் தொழிலாகக்கொண்டுள்ள சில கதிரைநாதன் அன்பர்கள், திருவிழாக் காலந்தோறும் தவறாது அங்கு சென்று தம் 'சீரிய' தொழிலைச்சிறிதும் சிக்கலுக்கு இடமின்றிச் செவ்வனே செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். அந்த அளவுக்குக் கதிரையம்பதிக்கடவுள் அவர்கள் மாட்டுக் கருணை கூர்ந்துள்ளார். எடுத்துக் காட்டாக ஒரு நிகழ்ச்சியை மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன்.

1928-ம் ஆண்டு கார்த்திகைத் திங்களில், நான் கதிர்காமம் போவதற்காகப்புறப்பட்டுக் கொழும்புப் புகைவண்டி நிலையத்திற்குபோனேன். அப்போது வேறு இருவரும் கதிர்காமம் போவதற்காக அங்கு வந்து சேர்ந்தனர். ஒருவர் திருநெல்வேலியைச்சேர்ந்த மூலைக்கருப்பட்டி என்னும் ஊரில் இருந்துவந்தவர். மற்றவர் கொழும்புச் செட்டித் தெருவில் இருந்துவந்தவர். நாங்கள் மூவரும் சேர்ந்து கதிர்காமத்திற்குப் போய்ச் சேர்ந்தோம். கதிர்காமத்திலுள்ள மாணிக்க கங்கை என்னும் ஆற்றில் குளிப்பதற்காகப்போய், எங்களிடமிருந்த பொருள்களை ஆற்றங்கரையில் வைத்துவிட்டுக், குளித்துக் கரை ஏறியபோது; என்னுடன்வந்தவர்களில் ஒருவருடைய பணப்பை (இருபது ரூபாயும் சில்லரையும்) காணப்படவில்லை, வேட்டி மடிப்புக்குள் வைக்கப்பட்ட பணப்பையை நாங்கள் ஆற்றில் இறங்கிக்குளிக்கும் சமயமாகப் பார்த்துக், கதிர்காமக் கடவுள் தம்முடைய திருட்டன்பர் ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டார். பின்னர் நாங்கள் இருவரும் வைத்திருந்த தொகையைக்கொண்டு, மூவரும் கதிர்காம யாத்திரையை முடித்துக்கொண்டு கொழும்பு வந்து சேர்ந்தோம்.

(தொடரும்)

Edited Printed & Published by C. N. Annadurai M A. at "Dravida Nadu" Press.
95, Tirukkachinambi Street. Conjeevaram.